சாதனையாளர்கள்

திருச்சி-2018







பேராசிரியர் முனைவர் தே. சம்பத்

தொகுப்பாசிரியர்

ஆசிரியர் உரை

எல்லோரும் தூங்கும்போது எவர் ஒருவர் விழித்துக் கொண்டிருக்கின்றாரோ – அவர்தான் சாதனையாளர். நடைமுறை வாழ்வில் மற்றவரைக் காட்டிலும் கடமை உணர்வோடு, ஆர்வமுடன் – கூடுதலான நேரம், உழைப்பு செலவிட்டு வெற்றி கிட்டும் வரை விடாமுயற்சியுடன் செயல்படுபவரே சாதனையாளர்.

தமிழகத்தின் குறிப்பிட்ட மாவட்டங்களில் எம் தேர்வுக் குழு சாதனையாளர்களைத் தேடியபோது, பல பிரமுகர்கள், அமைப்புகள் அடையாளம் காட்டிய நிறுவனங்களை இந்நூலில் புகழாரம் சூட்டியுள்ளோம்.

பல்வேறு துறைகளில் பரிணாமம் வளர்ச்சி கண்டவர்கள் 'சாதனையாளர்கள் திருச்சி 2018' எனும் இந்நூலில் சொந்தம் கொண்டாடுகின்றனர். அடுத்ததடுத்த தொகுப்பில் அணிவகுக்க அற்புத மனிதர்கள் சாதனை சரித்திரத்தில் இடம் பெற ஆயத்தமாக உள்ளனர்.

இணைபிரியா இலட்சிய உணர்வோடு என்னை என்றும் பல்வேறு கலைகளில் உற்சாகப்படுத்தி வரும் ருத்ரசாந்தி யோகாலய குருஜி யோகரத்னா R.P. கிருஷ்ணகுமார் அவர்களுக்குப் பாசமுடன் பாராட்டுக்கள்!

ருத்ரசாந்தி யோகாலயம் எழுத்துலகிலும் தடம் பதித்து வருவதற்கு சான்றாக தொடர்ந்து ஸ்ரீ தனலட்சுமி பதிப்பகம் மூலம் சாதனையாளர்களுக்கு தொடர்ந்து தொகுப்பு நூல் வெளியிட்டு வருகிறது.

அந்த வரிசையில் தங்கள் கரங்களில் "சாதனையாளர்கள்– திருச்சி 2018" ஆம்! இந்த நூல்கள் அடுத்த தலைமுறைக்கு வேல்கள்!

தங்களின் வாசிப்பை ரசிக்கும்

பேராசிரியர் முனைவர் தே.சம்பத்

Dr. A.K. காஜா நஜீமுதீன் D.Litt (USA)
செயலர் மற்றும் தாளாளர்,
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி–620 020.

திருச்சியின் கொடை வள்ளல் என். எஸ். காஜாமியான் ராவுத்தர் அவர்களின் மகனார் எஜமான் கே.ஏ.காதர் அவர்களுக்கு 1954–ம் ஆண்டு பிறந்த 4–வது மகன் காஜா நஜீமுதீன் அவர்கள்.

இவர் தம் பள்ளிப் படிப்பை திருச்சி கேம்பியன் பள்ளியிலும், கல்லுரிப் படிப்பு பி.காம் திருச்சி ஜமால் முகமது கல்லூரியிலும் கற்றார். இவர் பள்ளியில் படிக்கும் போது துப்பாக்கி சுடுதலில் தேசிய அளவில் பரிசு பெற்றவர். கைபந்து, கால்பந்து, ஹாக்கி, ஓட்டப்பந்தயம் என பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் திறம்பட கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார். மாநில அளவில் ஓட்டப்பந்தயத்தில் (Athletics) 10 முறை வென்றவர் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், இவரது உயர்கல்வி சேவையையும், சாதனைகளையும் பாராட்டி அமெரிக்க தமிழ்ப் பல்கலைக் கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் Doctor of Letters வழங்கியது.

சமூக பங்களிப்பு

சிறு வயதிலேயே சமுதாய விழிப்புணர்வோடு வாழ்ந்த இவர் ஏழை பணக்காரர், சாதி, இன வேறுபாடு, ஆண், பெண் பாகுபாடு இவைகள் குறித்து பல்வேறு

கோணங்களில் சிந்தித்து பல உரையாடல்களில் இதைப் பற்றி பேசியும், கேட்டும் சமுதாயம் தழைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு பாடுபட்டு வருகிறார். இத்தகைய சமுதாய விழிப்புணர்வு பார்வையில் சமூகத்தை சீரமைக்கும் பல்வேறு இயக்கங்களில் உறுப்பினராக தன்னை அங்கம் வகித்து செயல்பட்டு வருகிறார்.

கணிவும் இரக்கமும் கொண்ட இவர், பல ஏழை மாணவ, மாணவியர்களுக்கு கல்வி அளித்து கொண்டிருக்கிறார். பல சமயம் கல்லூரியில் படிக்க ஏழை மாணவ, மாணவியர்கள் பணம் செலுத்த இயலாமல் அல்லல்படுவதை நேரில் காணும் போது தனது பணத்தை அவர்களுக்கு வழங்கி கல்வியை கற்க உதவி செய்து வருகிறார். மேலும் கல்லூரியில் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்களிடம் மிக இனிமையாக பழகி மேலும் அவர்களுக்கு பல உதவிகளை செய்து அவர்களின் அன்பைப் பெற்றவர். கல்லூரியில் இவர் ஆட்சி மன்றக்குழு உறுப்பினராக 1995 முதல் 2003ம் ஆண்டு வரை செயலாற்றினார். பிறகு உதவிச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். பின்பு செயலர் மற்றும் தாளாளராக 2011 –ம் ஆண்டு பொறுப்பேற்றப் பின்பு ஏற்பட்ட மாற்றங்கள் ஒரு வரலாற்று மாற்றம் என்றே கூறலாம். கல்லூரி வளாகம் முழுவதும் சி.சி.டி.வி கேமரா மற்றும் உள் விளையபட்டு அரங்கம் (Indoor Stadium) கட்டமைப்பு இதற்கு ஓர் சான்று.

இவர் எதையும் எடுத்துச் செய்யும் திறனோடும், நேர்மையோடும், எப்பணியினைச் செய்தாலும் அதனை திறம்படச் செய்து முடிக்கும் மன வலிமைதான் இவரின் வெற்றிக்கு இதுவே தாரக மந்திரம் என்றும் கூறலாம்.

விருதுகள்

* 2008: **Doctor of Letters Awarded** by the International Tamil University, Maryland, USA. in the convocation function held at Kodaikanal, 2012.
* **Excellence Award-** by the United Human Care/ Rights International Maryland, USA, 2013.
* **Distiguished Educational Administrator Award** by the Department of Commerce and Financial Studies, Bharathidasan University, Trichy, 2014.
* **Eduprenuer Award** for promoting Education among rural young people in the India Sri Lanka Exchange Programme, 2016.

* `The Icon of Trichy' Award - 2016 by the MAM College of Engineering, Trichy.

ஒன்றே குலம், ஒருவனே தேவன் – திருமூலர்

யாதும் ஊரே, யாவரும் கேளிர்– கணியன் பூங்குன்றன்

பிறப்பொக்கும் எல்லா உயரிக்கும் – வள்ளுவம்

மனிதர்கள் அனைவரும் ஒரே குலத்தில் இருந்து பிறந்தவர்கள். ஒரு தாய், தந்தையரின் வழித் தோன்றல்கள் – (குர்ஆன், பைபிள்)

என்ற வரிகளை பின்பற்றிய வண்ணம், தன் வாழ்க்கையை பொது நலத்திற்காக அர்ப்பணித்து வாழ்ந்து வருகிறார். இவரது சேவை தொடர்ந்து செயல்பட இறைவன் இவருக்கு எல்லாவிதமான வளங்களையும், நல் ஆரோக்கியத்தையும் கொடுத்து அருள்புரிய வேண்டுகிறோம். இவர் வாழ்வு வளம் பெற வாழ்த்துவோமாக.

கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி

(தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழகத்தின் இணைவு,
தமிழக அரசின் நிதி உதவி பெறும் கல்லூரி)

பரதம் & இசைக் கலைகளில் பல்கலைக் கழகப் பட்டப்படிப்புகள்

+2 தேர்ச்சி பெற்றோர்க்கு	3 ஆண்டுகள் பட்டப் பயிற்சி
10th தேர்ச்சி பெற்றோர்க்கு +1 தேர்ச்சி பெறாதோர்க்கும்	5 ஆண்டுகள் பட்டப் பயிற்சிகள்
B.A. 3 ஆண்டுகள்	M.Phill (இசை) 1 ஆண்டு
I.B.A. 5 ஆண்டுகள்	Ph.D பகுதி / முழு நேரம்

✷சிறந்த வேலை வாய்ப்பு ✷மிகக் குறைந்த கல்விக்கட்டணம் ✷விடுதி வசதி உண்டு

கலைக்காவிரி நுண்கலைப் பள்ளி வழங்கும் மாலை நேரப் பயிற்சிகள்

பரதநாட்டியம்	மோகினியாட்டம்	குச்சுப்புடி	கதக்	குரலிசை
ஹார்மோனியம்	வீணை	வயலின்	தபேலா	மிருதங்கம்
புல்லாங்குழல்	ஓவியம்	கிட்டார் (Guitar)	கீபோர்டு (Keyboard) (Western Classical)	நாட்டுப்புற நடனங்கள்

சேர்க்கைக்கு முந்துங்கள்

+1 தேர்ச்சி பெறாதோரும் பட்டம் பயிலலாம்

தொடர்புக்கு :
18, பென்வெல்ஸ் சாலை, கண்டோன்மென்ட், திருச்சி - 620 001.
தொலைபேசி - 0431 - 2460678,2460670
E.mail : kalaikaviri2004@yahoo.com
Website : www.kalaikavirifinearts.com